பிரஸார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

23 07 2024 6 30

செவ்வாய்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

- அடுத்த ஐந்து ஆண்டுகளில் நான்கு கோடி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு, உள்ளிட்ட முக்கிய அறிவிப்புகளை நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் மத்திய பட்ஜெட்டில் இன்று அறிவித்துள்ளார்.
- தங்கம் மற்றும் வெள்ளிக்கான சுங்கவரி ஆறு சதவீதமாக, குறைக்கப்பட்டுள்ளது.
- தனிநபர் வருமானத்துக்கான நிரந்தர கழிவு 75 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.
- அனைத்து பிரிவினரும் பயன்பெறும் வகையில் பட்ஜெட் அமைந்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திரமோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.
- பட்ஜெட்டை எதிர்க்கட்சிகள் குறை கூறியுள்ளன. தொழில் நிறுவனங்கள் வரவேற்றுள்ளன.
- தமிழகத்திற்கான எந்த அறிவிப்பும் பட்ஜெட்டில் இடம்பெறாதது ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது என முதலமைச்சரும், திமுக தலைவருமான திரு மு க ஸ்டாலின் கூறியுள்ளார்.
- ஆசிய கோப்பை மகளிர் டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா - நேபாளத்தை எதிர்கொள்கிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

[]<<<>>>[]

உற்பத்தி, வேலைவாய்ப்பு, சமூகநீதி, நகர்ப்புற வளர்ச்சி, எரிசக்தி பாதுகாப்பு, கட்டமைப்பு மற்றும் சீர்திருத்த நடவடிக்கைகள் உள்ளிட்ட ஒன்பது அம்சங்களுக்கு பட்ஜெட்டில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையில் மூன்றாவது முறையாக ஆட்சி பொறுப்பேற்ற பின் முதலாவது பட்ஜெட்டை இன்று மக்களவையில் தாக்கல் செய்து அவர் உரையாற்றினார்.

வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்கும் நோக்கில் அனைவருக்கும் வாய்ப்பு அளிக்கும் வகையில் இந்த பட்ஜெட் அமைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

வேளாண்மை, வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாடு, உள்ளார்ந்த மனிதவள மேம்பாடு, சமூகநீதி, தொழில்கள் மற்றும் சேவைகள், நகர்புற வளர்ச்சி, எரிசக்தி பாதுகாப்பு, ஆராய்ச்சி மேம்பாடு மற்றும் அடுத்த தலைமுறையினருக்கான சீர்திருத்தங்கள் இந்த பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச அளவில் பொருளாதாரம் பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டு வரும் வேளையிலும் இந்தியா விரைவாக வளர்ச்சி பெற்று வரும் பொருளாதார நாடாக உள்ளது என்று அவர் கூறினார்.

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, பணவீக்கமும் கட்டுக்குள் இருப்பதாக அவர் கூறினார்.

ஏழை மக்களுக்கு வழங்கப்படும் இலவச உணவு தானிய திட்டம் ஐந்தாண்டுகளுக்கு நீட்டிக்கப்படுவதாக அவர் அறிவித்தார்.

இதன் மூலம் 80 கோடி பேர் பயனடைவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

அடுத்த ஐந்தாண்டுகளில் நான்கு கோடி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிப்பதற்கென சிறப்பு திட்டம், இரண்டு லட்சம் கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

சிறந்த 500 தொழில் நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டு, இளைஞர்களுக்கு பணியிடைப் பயிற்சி அளிப்பதற்கான திட்டம் செயல்படுத்தப்படும் என்றும், இதனால் வரும் ஐந்து ஆண்டுகளில் ஒரு கோடிக்கும் மேற்பட்டோர் பயன்பெறுவர் என்றும் அவர் தெரிவித்தார்.

இப்பயிற்சியின் போது மாதம் ஐயாயிரம் ரூபாய் பயிற்சி உதவித்தொகை வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிக்காக ஒரு லட்சத்து 48 ஆயிரம் கோடி ரூபாய் இந்த பட்ஜெட்டில் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒரு கோடி விவசாயிகள் அடுத்த இரண்டாண்டுகளில் இயற்கை வேளாண் முறைக்கு மாறுவதற்கு ஊக்கமளிக்கப்படும்

சுயசார்பு இந்தியா இயக்கத்தின் கீழ் வேளாண் உற்பத்தியை அதிகரிக்க உத்வேகம் அளிக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

மாநில அரசுகளோடு இணைந்து வேளாண் வளர்ச்சிக்கான டிஜிட்டல் பொது கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்

ஒட்டுமொத்த வளர்ச்சிக்கென தேசிய கூட்டுறவு கொள்கை அறிவிக்கப்படும்

ஊரக பொருளாதாரம் விரைவுபடுத்தப்படும்

புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்

உயர்கல்வி நிறுவனங்களில் கல்வி பயில்வதற்கு 10 லட்சம் ரூபாய் வரை கடனுதவி வழங்கப்படும்

பணிபுரியும் மகளிருக்கென விடுதிகள் ஏற்படுத்தப்படும்

எந்தவொரு பருவநிலையையும் எதிர்கொள்ளும் வகையில் 109 உயர் விளைச்சலுக்கு வகை செய்யும் விதைகள் அறிமுகப்படுத்தப்படும்

கடனை முறையாக திருப்பிச் செலுத்திய முத்ரா திட்டப் பயனாளிகளுக்கான கடனுதவி பெறுவதற்கான உச்சவரம்பு 20 லட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்

அஞ்சலக வங்கி சேவை வடகிழக்கு மாநிலங்களில் விரிவுபடுத்தப்படும்

பிரதமரின் நகர்புற வீட்டுவசதி திட்டத்திற்கு 10 லட்சம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒரு கோடி மக்களுக்கு வீடு கட்டித் தரப்படும்,

நாடுமுழுவதும் 100 நகரங்களில் தொழில் பூங்காக்கள் ஏற்படுத்தப்படும்

மகளிர் மற்றும் பெண் குழந்தைகளின் நலனுக்கு மூன்று லட்சம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்

பிரதமரின் கிராமப்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் நான்காவது கட்டமாக செயல்படுத்தப்படும்

கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 11 லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்

எரிசக்தி மாற்றத்திற்கான கொள்கை ஆவணம் வெளியிடப்படும்

பொருளாதார வளர்ச்சிக்கு மேலும் உத்வேகம் அளிக்கும் வகையில், அடுத்த தலைமுறை சீர்திருத்த நடவடிக்கைகளுக்கான கொள்கை வகுக்கப்படும்

நாடு முழுவதும் 63 ஆயிரம் கிராமங்களில் ஐந்து கோடி பழங்குடியின மக்களின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கென திட்டம் அறிமுகப்படுத்தப்படும்

பீகார், ஜார்கண்ட், மேற்குவங்கம், ஒடிசா மற்றும் ஆந்திரப்பிரதேசத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கென திட்டம் வகுக்கப்படும்

ஆந்திரப்பிரதேச விவசாயிகளின் வாழ்வாதார திட்டமான போலாவரம் திட்டத்தை விரைவில் நிறைவேற்ற உரிய நிதி வழங்கப்படும்

பீகாரில் நெடுஞ்சாலைத் திட்டங்களை மேம்படுத்துவதற்காக 20 ஆயிரம் கோடி ரூபாயும், பாசன வசதி மற்றும் வெள்ள மேலாண்மை திட்டங்களுக்காக 11 ஆயிரத்து 500 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் அமைச்சர் அறிவித்தார்.

சிறு குறு தொழில்துறையின் வளர்ச்சிக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

ஆராய்ச்சிப் பணிகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் தேசிய ஆராய்ச்சி நிதியம் ஏற்படுத்தப்படும்

புற்றுநோயால் பாதிக்கப்படும் நோயாளிகளுக்கு வழங்கப்படும் மூன்று மருந்துகளுக்கான சுங்கவரி ரத்து செய்யப்படும்

தங்கம் மற்றும் வெள்ளிக்கான சுங்கவரி 15 சதவீதத்திலிருந்து ஆறு சதவீதமாகவும், பிளாட்டினத்திற்கான சுங்கவரி ஆறு புள்ளி நான்கு சதவீதமாகவும் குறைக்கப்படும்

வெளிநாட்டு நிறுவனங்களுக்கான கார்ப்பரேட் வரி 40-லிருந்து 35 சதவீதமாக குறைக்கப்படும்

குறிப்பிட்ட தொலைத்தொடர்பு கருவிகளுக்கான சுங்கவரியும் 15-லிருந்து 10 சதவீதமாக குறைக்கப்படும்

போன்ற அறிவிப்புகளையும் திருமதி. நிர்மலா சீதாராமன் வெளியிட்டார்.

தனிநபர் வருமான வரியை பொறுத்தவரை இரண்டு அறிவிப்புகளையும் அமைச்சர் வெளியிட்டார்.

இதன்படி, புதிய வரி கணக்கு தாக்கல் செய்யும் திட்டத்தின் கீழ், நிரந்தரக் கழிவு 50 ஆயிரம் ரூபாயிலிருந்து 75 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படுவதாக அவர் கூறினார்.

இந்த திட்டத்தின் கீழ் மூன்று லட்சம் ரூபாய் வரை ஆண்டு வருமானம் உள்ளவர்களுக்கு வரி கிடையாது என்றும் அவர் அறிவித்தார்.

ஏழு லட்சம் ரூபாய் வரை ஐந்து சதவீதமும், 10 லட்சம் ரூபாய் வரை 10 சதவீதமும், 12 லட்சம் ரூபாய் வரை 15 சதவீதமும், 12 முதல் 15 லட்சம் ரூபாய் வரை 20 சதவீதமும், 15 லட்சத்திற்கும் கூடுதலாக வருமானம் பெறுபவர்களுக்கு 30 சதவீதமும் வரி விதிக்கப்படும் என்று திருமதி நிர்மலா சீதாராமன் அறிவித்தார்.

இந்த பட்ஜெட்டில் நிதி பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நான்கு புள்ளி ஒன்பது சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

மூலதனச் செலவு 11 லட்சத்து 11 ஆயிரம் கோடி ரூபாயாக இருக்கும் என்றும், இதனைக் கொண்டு நாட்டின் உள்கட்டமைப்புக்கு உத்வேகம் அளிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

[]<<<>>>[]

நடப்பு ஆண்டிற்கான மத்திய பட்ஜெட் உள்ளார்ந்த வளர்ச்சியுடன் கூடிய லட்சிய பாரதத்தை உருவாக்க பேறுதவியாக இருக்கும் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

பட்ஜெட் குறித்து காணொலியில் பதிவிட்டுள்ள பிரதமர், சமூகத்தில் ஒவ்வொரு பிரிவு மக்களுக்கும் பயன்பெறத்தக்க வகையில் இது அமைந்துள்ளது என்றும், வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான பாதையை நிறுவி உள்ளதாகவும் கூறியுள்ளார்.

வேலைவாய்ப்புடன் இணைந்த ஊக்கத்தொகை திட்டத்.தின் மூலம் கோடிக்கணக்கான புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டிற்கு சிறப்பான வளர்ச்சியையும், பிரகாசமான எதிர்காலத்தையும் இந்த பட்ஜெட் உறுதி செய்திடும் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

வளர்ச்சியின் புதிய உச்சத்துக்கு கொண்டு செல்லும் இந்த பட்ஜெட்டின் பயன்களை பெறும் நாட்டு மக்களுக்கு தமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாகவும் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

இந்த பட்ஜெடில் ஒன்பது அம்சங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள முன்னுரிமை வரவேற்கத்தக்கது என்றும், நாட்டை வளர்ச்சிப்பாதையில் கொண்டு செல்லும் என்றும் வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ்கோயல் கூறியுள்ளார்.

[]<<<>>>[]

நாட்டின் தற்சார்பு வளர்ச்சியையும், பொருளாதார மாற்றத்தையும் உறுதி செய்யும் வகையில் அமைந்துள்ள இந்த பட்ஜெட்டில் பாதுகாப்புத்துறைக்கு சுமார் ஆறு லட்சத்து 22 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதற்கு நன்றி தெரிவிப்பதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் கூறியுள்ளார்.

[]<<<>>>[]

மத்திய பட்ஜெட்டை பல்வேறு எதிர்க்கட்சிகள் குறை கூறியுள்ளன.

எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி, இந்த பட்ஜெட்டில் மத்திய அரசின் வெற்று வாக்குறுதிகள் அடங்கி இருபபதாகக் கூறியுள்ளார்.

சாதாரண மக்களுக்கான எந்த நிவாரணமும் இதில் இடம்பெறவில்லை என்றும், அவர் குறை கூறியுள்ளார்.

[]<<<>>>[]

சாமானிய மக்களின் மேம்பாட்டுக்கான எந்த ஒரு முக்கிய அறிவிப்பும் பட்ஜெட்டில் இடம்பெறவில்லை என்று காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன் கார்கே கூறியுள்ளார்.

[]<<<>>>[]

சமாஜ்வாதி கட்சித் தலைவர் திரு அகிலேஷ் யாதவ் இந்த பட்ஜெட்டில் பணவீக்கத்தை கட்டுப்படுத்துவது குறித்தோ, வேலைவாய்ப்பின்மை பிரச்சினைக்கு தீர்வு காண்பது குறித்தோ எந்த அறிவிப்பும் இல்லை என்று குறை கூறியுள்ளார்.

விவசாயிகள் பயன்பெறுவதற்கான அறிவிப்புகள் இதில் இடம்பெறவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

சிவசேனா கட்சியின் திருமதி பிரியங்கா சதுர்வேதி, விவசாயிகளுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை குறித்தோ, விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்வது குறித்தோ எந்த அறிவிப்பும் இடம்பெறவில்லை என்று கூறியுள்ளார்.

[]<<<>>>[]

இந்த பட்ஜெட்டை பல்வேறு தொழில் நிறுவனங்கள் வரவேற்றுள்ளன.

வளர்ச்சியை மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள இந்த பட்ஜெட் இளைஞர்கள், பெண்கள் மற்றும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் அமைந்துள்ளதாக ஃபிக்கி கூட்டமைப்பின் தலைவர் திரு அனிஷ் ஷா தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

இந்திய தொழில் கூட்டமைப்பின் தலைவர் திரு சஞ்ஜீவ் புரி, நாட்டின் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தும் வகையில் பட்ஜெட் அமைந்துள்ளது என்றும், சிறுதொழில் வளர்ச்சி, திறன் மேம்பாடு, உள்கட்டமைப்பு உள்ளிட்ட முக்கிய விஷயங்களில் கவனம் செலுத்தப்பட்டிருப்பதாகவும் கூறியுள்ளார்.

[]<<<>>>[]

அசோசெம் அமைப்பின் பொதுச்செயலாளர் திரு தீபக் சூட், அனைத்து விஷயங்களையும் சம நிலையோடு அணுகி உள்ளதாகவும், நாட்டின் வளர்ச்சியை விரைவுபடுத்தி வளர்ச்சிபெற்ற இந்தியா என்ற தொலைநோக்கு இலக்கை அடைவதற்கு இது உதவிடும் என்றும் கூறியுள்ளார்.

சிறுதொழில் துறையினருக்கான கடன் உத்தரவாதத் திட்டம் உள்ளிட்டவை இந்த பட்ஜெட்டில் வரவேற்கத்தக்கவை என்றும், இந்திய தொழில் கூட்டமைப்பின் கோயபுத்தூர் மண்டல தலைவர் திரு ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

*( சவுண்ட்பைட் - ராதாகிருஷ்ணன் ) — 40 செண்ட்*

தெரிவு செய்யப்பட்ட தொழில் நிறுவனங்கள் மூலம் இளைஞர்களுக்கு ஊக்கத்தொகையுடன பயிற்சி அளிக்கும் திட்டம் வரவேற்கத்தக்கது என்று திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்க தலைவர் திரு சுப்ரமணியன் கூறியுள்ளார்.

*( சவுண்ட்பைட் - சுப்ரமணியன் ) -24---- செகண்ட்*

பொது மக்களும் இந்த பட்ஜெட் குறித்து தங்கள் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

மகளிரின் திறன் மேம்பாட்டிற்கும், புத்தாகத் தொழிலில் ஈடுபடுவதற்கும் அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்களை வரவேற்பதாக சேலத்தைச் சேர்ந்த மகளிர் தெரிவித்தனர்.

*( சவுண்ட்பைட் - 2 மகளிர் ) -40---- செகண்ட்*

விவசாயத்திற்கு கணிசமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதும், பருவநிலை மாற்றத்தின்போது சாகுபடி பணிகளை மேற்கொள்வதற்கான உதவி திட்டங்களை அறிவிக்கப்பட்டிருப்பதும் வரவேற்கத்தக்கது என்றும் வேலூரைச் சேர்ந்த விவசாயிகள் தெரிவித்துள்ளனர்

*( சவுண்ட்பைட் - விவசாயிகள் ) -40--- செகண்ட்*

[]<<<>>>[]

தமிழகம் குறித்த எந்த ஒரு அறிவிப்பும் மத்திய பட்ஜெட்டில் இடம்பெறாதது கண்டிக்கத்தக்கது என திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு மு க ஸ்டாலின் கூறியுள்ளார்.

ஒட்டுமொத்த இந்தியாவுக்குமான நிதிநிலை அறிக்கையாக இந்த பட்ஜெட் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்களாட்சி மற்றும் கூட்டாட்சி தத்துவங்களை பாதிக்கும் வகையில் இது அமைந்துள்ளதாகவும் திரு மு க ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்

[]<<<>>>[]

நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு நிவாரணம் வழங்குவது குறித்த அறிவிப்பு பட்ஜெட்டில் இல்லை என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிதலைவர் திரு செல்வப்பெருந்தகை கூறியுள்ளார்.

[]<<<>>>[]

வரிக் குறைப்பு, வேலைவாய்ப்பு திட்டங்கள் வரவேற்கத்தக்கவை என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு கூறியுள்ளார்.

தமிழகத்திற்கான நதிநீர் இணைப்புத் திட்டம் உள்ளிட்டவை இடம்பெறாதது ஏமாற்றம் அளிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

மதிமுக பொதுச்செயலாளர் திரு வைகோ, சென்னை மெட்ரோ ரயில் திட்டத்திற்கும், கோவை, மதுரை புதிய மெட்ரோ ரயில் திட்டங்களுக்கும் நிதி ஒதுக்கீடு இல்லை என குற்றம்சாட்டியுள்ளார்.

[]<<<>>>[]

பெரும் தொழில் நிறுவனங்கள் பயன்பெறும் வகையில் இந்த பட்ஜெட் அமைந்துள்ளதாகவும், விவசாயிகள், தொழிலாளர்கள் உள்ளிட்ட சாதாரண மக்களுக்கான அறிவிப்புகள் இல்லை என்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் திரு இரா முத்தரசன் கூறியுள்ளார்.

[]<<<>>>[]

பட்ஜெட் குறித்த சிறப்பு கலந்துரையாடல் நிகழ்ச்சிக்கு, சென்னை அகில இந்திய வானொலியின் செய்திப் பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

இரவு எட்டரை மணிக்கு நேரலையில் ஒலிபரப்பாகும் இந்த நிகழ்ச்சியில், பொருளாதார நிபுணர் கௌரி, பத்திரிகையாளர் எம் சி ராஜன் மற்றும் ஊடகவியலாளர் சியாமளா பங்கேற்கின்றனர்.

மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

[]<<<>>>[]

ஆசிய கோப்பை மகளிர் டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா - நேபாளத்தை எதிர்கொள்கிறது.

தம்புலாவில் இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

[]<<<>>>[]

தமிழ்நாடு பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் மதுரை அணி – கோவை அணியை எதிர்கொள்கிறது.

நெல்லையில் இப்போட்டி இரவு மணி 7-15-க்கு தொடங்குகிறது.

*End of News*